For Private Circulation Only

ECHOES INDIA

# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

மே 2014 மலர் 7, இதழ் 3


## பூஜிய பாபூஜி மகராஜின் 115வது பிறந்த நாள் விழா - 29 & 30 ஏப்ரல் மற்றும் மே 1, 2014






### DJ பார்க், திருப்பூர்

விழாவுக்கான ஏற்பாடுகள் பல வாரங்களுக்கு முன்னமே தொடங்கப்பட்டன. விழாவுக்கு முந்திய வார முடிவில், அப்யாசிகள் அவ்விடத்தில் குழுமத் தொடங்குகையில், அங்கிருந்த வாதாவரணம் ஒரு அமைதியான ஆனந்தமும், எதிர்பார்ப்பும் நிறைந்ததாய் மாறத் தொடங்கியது.

### தியான மண்டபத்தில்

வண்ணமயமாக அலங்கரிக்கப்பட்ட தியான மண்டபத்தில், பாபூஜியின் மிகப் பெரிய படம் மேடையை ஆக்கிரமித்தது. தியான மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த பெரிய LCD திரைகள், எல்லோரும் நிகழ்ச்சிகளை அருகிருந்து பார்ப்பது போல் செய்தன. அப்யாசிகள் உடல் வறட்சியைத் தவிர்க்க நிறைய தண்ணீர் குடிக்கும்படி ஆலோசிக்கப்பட்டிருந்ததால், தொண்டூழியர்கள் தியான மண்டபத்தில் குடிநீர் வழங்கினர்.

மாஸ்டர் உடல் நலமின்றி சென்னையிலேயே தங்கியதால், மூன்று நாட்கள் நடைபெற்ற விழாவில், சகோதரர் கம்லேஷ் படேல் எட்டு சத்சங்கங்கள் நடத்தினார். சத்சங்கங்கள் பண்டாராவில் கலந்து கொண்ட சுமார் 15000 அப்யாசிகளது அனுபவங்களை ஊக்கமூட்டி, ஆழ்நிலைபடுத்துவதாக இருந்தன. 29 ஏப்ரல் அன்று சத்சங்கங்களைத் தொடர்ந்து மார்ச் 2014இல் பெற்ற சில சிறப்பு விஸ்பர்ஸ் அருட்செய்திகள் படிக்கப்பட்டன. இச்செய்திகள், மாஸ்டரின் வாரிசு, சகோதரர் கம்லேஷ் படேல் என்பதை உறுதிப்படுத்திப் பரிபூரணமான அங்கீகாரத்தையும் தெரிவித்தன.




29ம் தேதி காலை, சிறுவர்கள் பல புதிய பதிப்பீடுகளை வெளியிட்டனர். பிறகு சகோதரர் கம்லேஷ் படேல், 'Complete works of Ram Chandra', vol.4ஐப் பற்றியும், இப்புத்தகத்தை உருவாக்குவதில் பங்கேற்றவர்களைப் பற்றியும் பேசினார். இப்புத்தகத்தில் அப்யாசிகளுக்கு பாபூஜி









"நாம் பாதையைப் பின்பற்றுவதில், தப்பாது, வேறெங்கும் திரும்பாது, இவ்வருட்செய்திகளில் திட நம்பிக்கையுடன், நம் மேலும் நம்பிக்கையுடன், மனித இனத்தின் மேல் அன்புடனும், அதுவே எல்லா உயிர்களின் மேலும் அன்பாக வளரும்படி பாபுஜி நம்மை ஆசீர்வதிப்பாராக"

\- பி. ராஜகோபாலாச்சாரி

எழுதிய சில கடிதங்களும் மற்றும் முன்பு ஹிந்தியில் மட்டும் பிரசுரமான பல கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. கடும் வெப்பமாக இருந்த போதும், அப்யாசிகள் நிகழ்ச்சி முடியும் வரை தியான மண்டபத்திலேயே இருந்தனர்.

30ம் தேதி காலை 6மணி தியானத்திற்குப் பிறகு, சகோதரர் கம்லேஷ், ஆறு திருமணங்களை நடத்தி வைத்தார். சிறிய இடைவெளிக்குப் பிறகு, சென்னையிலிருந்து வீடியோ லிங்க் வழியாக, மாஸ்டர் திரைகளில் தோன்றினார். லிங்க் மூலமாய், மாஸ்டரின் பேத்தி மாதுரி கிருஷ்ணாவால் படிக்கப்பட்ட விஸ்பர்ஸ் அருட்செய்தியையும், மாஸ்டரின் உரையையும் நேரடியாக ஒலிபரப்ப முடிந்தது. அதே லிங்க் உலகமெங்கும் உள்ள SRCM மையங்களுக்கும் கிடைக்கப்பெற்றது.

30ம் தேதி மாலை, நாள் முழுவதும் அடித்த கடும் வெயில் மறைந்து குளிர்ந்த காற்று வீசியது. சகோதரி ரஞ்ஜனா ஷர்மாவின் பஜன்கள் எல்லோரையும் மாஸ்டரின் நினைவில் ஆழ்ந்திருக்கச் செய்தன.

### மற்ற நடவடிக்கைகள்

மண்டலப் பொறுப்பாளர்கள், மையப்பொறுப்பாளர்கள் மற்றும் ஆசிரம நிர்வாகிகள் ஆகியோருக்கு ஒரு சந்திப்பு இருந்தது. வேறு பல அணிகளும், தொண்டூழியர்களும் சந்தித்து, தாங்கள் மேற்கொண்டுள்ள பணிகளைப் பற்றி கலந்தாலோசித்தனர்.








சிறுவர் மற்றும் இளைஞர் மையம், வயது வாரியாக 3 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, பல்வேறு செயல்களில் சிறுவர்களை ஈடுபடுத்தியிருந்தது. அவ்விடம், கண்கவர் வண்ணங்களில் 8000க்கும் மேலான ஒரிகாமி ('peace crane') அமைதி பறவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒரு அதிர்ஷ்டக் குலுக்கலின் மூலம் சிறுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, புதிய வெளியீடுகளைத் தத்தம் மொழிகளில் அறிவிக்க, சகோ. கம்லேஷுக்கு உதவினர். பண்டாரவில் சுமார் 2500 சிறுவர்கள் பதிவு செய்திருந்தனர்.

வழக்கமாய் இருக்கும் பெரிய சிற்றுண்டிச்சாலையைத் தவிர, நீண்ட தூரம் நடப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, இன்னும் மூன்று சிற்றுண்டிச்சாலைகள் வளாகத்தில் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்தன. உண்ணும் இடம், தங்கும் கூடாரங்கள், மிஷன் வரலாறு பற்றிய காட்சியரங்கம், புகைப்படக் காட்சியரங்கம், டிஷர்ட் கடைகள் ஆகியவை வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டு பண்டாரா சீராக நடப்பதற்கு உதவின. மாஸ்டரின் காட்டேஜுக்கு வெளியே இருந்த அமைதி மண்டலம், பொருத்தமான வாதாவரணத்தையும், மாஸ்டரது நினைவையும் ஏற்படுத்தியது.











**உரைகள்**

பண்டாராவின் போது, சகோ. கம்லேஷ் மூன்று முறை உரையாற்றினார். அவர், ஒழுங்கான பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், பாபூஜி மகராஜின் உபதேசங்களைத் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறினார். மே1 அன்று வழங்கிய முடிவுரையில் அவர், நமது பரிணாம வளர்ச்சியை எப்பொழுதும் தாமதமாக்கும் ஒரே காரணம் ஆசைகளாகும் என்றும், தியானம் மற்றும் நிரந்தரநினைவு பயிற்சியின் மூலம், ஆசைகள் நம்மை பாதிக்காத நிலையை அடைய நாம் முயல வேண்டும் என்றும் கூறினார். விழாவை வெற்றிகரமாக்க உதவிய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தொண்டூழியர்களுக்கு நன்றி கூறுகையில் அவர், "பெயர் தெரியாமல் இருக்கும் ஆத்மாக்கள் எல்லோரும் தங்களுடைய விதியானது மிகச் சிறப்பாய் மாஸ்டரின் மென்மையான இதயத்துடன் இணைந்திருப்பதைப் பற்றி உறுதியாக இருக்க வேண்டும்", என்று கூறினார்.

## மணப்பாக்கத்தில்

மணப்பாக்கத்தில் 3500க்கும் மேற்பட்ட அப்யாசிகள் குழுமியிருந்தனர். தியான மண்டபத்தின் வாயில், அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. 29, 30 ஏப்ரல், மற்றும் மே 1அன்றும் மாஸ்டர், காலை சத்சங்கங்கத்தை நடத்தினார். பகல் நேரங்களில் அவர் பல்வேறு தேசங்களிலிருந்து வந்த அப்யாசிகளை சந்தித்தார்.

30ம் தேதியன்று, காலை 6.00 மணிக்கு மாஸ்டர், காட்டேஜில் பிரசாதம் வழங்கினார். அவர் ஒளிமயமாகவும் தெம்புடனும் காணப்பட்டார். சத்சங்கத்திற்குப் பிறகு, நேரடி வீடியோ லிங்க் மூலம் திருப்பூர் பண்டாராவுடன் இணைப்பு ஏற்பட்டது.30ம் தேதி விஸ்பர் செய்தி, மாதுரி கிருஷ்ணாவால் படிக்கப்பட்டபின், மாஸ்டர் பேசினார். அண்மையில் பெற்ற விஸ்பர்ஸ் அருட்செய்திகளைப் குறித்துப் பேசுகையில் அவர், அவை எதிர்காலத்தில் மிஷனின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதை வலியுறுத்திய போதிலும், நாம் நிகழ்காலத்தில் தான் அக்கறை கொள்ள வேண்டும் என்றும், எதிர் காலத்தை எதிர்காலத்துக்கு விட்டு விட வேண்டும் என்றும் கூறினார். அவர், "நான் மறுபடியும் கூறுகின்றேன், நாம் வைக்கப்பட்டிருக்கும் இக்காலத்திலிருந்து நாம் பயனடைய வேண்டும். இயற்கை நம்மை இங்கு நிறுத்தி, நமக்கு இப்போதிருக்கும்படியான மிஷனையும் அது அளிக்கக்கூடிய நன்மைகளுடனான வாய்ப்பையும் கொடுத்துள்ளது. நாம் தயக்கமில்லாமல், எல்லோரிடமும் அன்புடன், காழ்ப்புணர்ச்சி, வெறுப்பு, விமர்சனம் இவை யாவும் இல்லாமல் முன்னேற வேண்டும். இவ்வாறு பேசுவது மிக எளியது, ஆனால் நடைமுறையில் கொண்டு வருவது மிகவும் கடினமானதாகும்" என்று கூறினார். மாஸ்டர் பின்பு சகோ.மந்தனாவுடன் பிறந்த நாள் கேக்கை வெட்டி அதனை பாபூஜி மகராஜுக்கு நிவேதனம் செய்தார்.

> "நாம் பரிணாம வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோம் என்றால், இங்கேயும் வளர்ச்சி அடைய வேண்டும். அது இங்கிருந்து ஆரம்பித்து, அங்கே முடிகிறது. அது எப்படி ஆரம்பிக்கிறது? நமது இதயங்கள் மென்மேலும் இலேசாகுவதனாலும், தவறான எண்ணமும், வெறுப்பும் இல்லாமல் மேலும் மேலுமான மனிதர்களை அரவணைத்துக் கொள்ளும் தன்மை நம்மில் அதிகரிக்கும் போதும் அது ஆரம்பிக்கிறது."
>
> - பி.ராஜகோபாலாச்சாரி





## மணப்பாக்கத்திலிருந்து செய்திகள்

### பிப்ரவரி 2014

**காயத்ரி'யில் மாஸ்டர்:** 5-14 பிப்ரவரி

திருவள்ளூர் நிலத்தில், பிப்ரவரி 5ம் தேதியன்று மருத்துவமையம் கட்ட ஆரம்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாஸ்டரின் உடல் நிலை பயணம் மேற்கொள்ள ஏதுவாக இல்லாததால், சகோ. கம்லேஷ் பாயையும் சகோ. கிருஷ்ணாவையும் அவரின் பிரதிநிதிகளாக அனுப்பி வைத்தார். மாஸ்டர் காலை சுமார் 11 மணி அளவில் ஒரு வணிக வளாகத்திற்கு சென்று கொஞ்சம் தின்பண்டங்கள் வாங்கிக்கொண்டு "காயத்ரி"க்கு சென்றார். அவரை எதிர்பார்க்காத குடும்பத்தினர் ஆச்சரியம் அடைந்தனர். ஆசிரமத்திற்கு திரும்பிப்போக ஏற்கனவே முடிவு செய்திருந்த போதிலும், தன் திட்டத்தை மாற்றி "காயத்ரி"யிலேயே தங்க முடிவு செய்தார்.

**கான்பூர் ஆசிரம கட்டுமான திறப்பு விழா :**
ஞாயிறு,பிப்ரவரி 9ம் தேதி

மாஸ்டர் சீக்கிரமாகவே தயாரான போதிலும், அவரின் உடல் நிலை சரியாக இல்லை. இருப்பினும் அவர் கான்பூர் அப்யாசிகளை ஒளிபரப்பு மூலம் கண்ணுற்று வாழ்த்து தெரிவித்தார். அவர்களும் தங்கள் அன்பையும் நெருக்கத்தையும் அவருடன் பகிர்ந்து கொண்டனர். உடனேயே மாஸ்டர் புத்துணர்ச்சி கொண்டு அங்கு கூடியிருந்தவர்களுடன் உரையாற்றினார். அடிக்கல் நாட்டும் பொருட்டு செங்கல் முதலியன எவ்வாறு அமைக்க வேண்டும் என்பதைப்பற்றி அவர்களுக்கு எடுத்துரைத்து, கட்டுமான பணியின் முழு விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். பிறகு, தான் இங்கிருந்தே சத்சங்கம் ஆரம்பிப்பதாகவும், அவர்களை தியானத்தில் அமருமாறும் கேட்டுக்கொண்டார். பின் மாஸ்டர் "காயத்ரி"யின் கூடத்திற்கு வந்து அங்கு அமர்ந்திருந்த அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். அந்த ஒரு மணி நேர சத்சங்கத்திற்குப்பின் மாஸ்டர் மிகவும் களைப்புற்றதால், வீட்டினுள் ஓய்வெடுக்கச்சென்றார்.

ஆசிரமத்தில் கம்லேஷ் பாய் சில திருமணங்களை நடத்தி வைத்தார்.



**ஐரோப்பிய பிரிபெக்டுகளின் கூட்டம்** : 2014, 15-20 பிப்ரவரி

மாஸ்டர் 15ம் தேதி மணப்பாக்கம் ஆசிரமத்திற்கு வருகை புரிந்து கூட்டத்தை தொடங்கி வைத்தார். ஓய்வு விடுதி 'ஏ' யில் கூடியிருந்த பிரிபெக்டுகளுக்கு சத்சங்கம் நடத்தினார். பிறகு, அவர்களின் பணியை எவ்விதம் மெருகூட்ட வேண்டுமென ஆலோசனை கூறினார். நாம் எப்பொழுது நம் வேலையை நேசித்து செய்கிறோமோ, அப்பொழுது, அப்பணி மென்மேலும் மெருகூட்டப்பட்டு மிகவும் சிறப்பாக அமைகிறது எனக்கூறினார். அதற்கு பல உதாரணங்களை எடுத்துவைத்தார். மாஸ்டர் "காயத்ரி"க்கு திரும்பி செல்ல இருந்ததால், அவர்களை சிறு குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு மாலையும், தன்னை சந்திக்கும்படி அழைப்பு விடுத்தார்.

**சர்வதேச ஸ்காலர்ஷிப் பயிற்சி நிகழ்ச்சி (ISTP)**

15ம் தேதியன்று ISTPயில் பங்கு பெற்ற அனைவரையும், ஒருங்கிணைப்பாளர்களையும் தன்னுடன் மதிய உணவருந்த அழைப்பு விடுத்தார். அனைவருக்கும் சான்றிதழ் வழங்கிய பின், ஒவ்வொருவரும் உணவுத்தட்டை ஏற்றுக்கொண்டதை உறுதி செய்த பின் அவர்களுடன் பின்கூடத்தில் உணவருந்தினார். மாலையில் "காயத்ரி"க்கு புறப்பட்டுச்சென்றார்.

**ஞாயிறு, 16 பிப்ரவரி**

"காயத்ரி"யில் காலையில் குழுமியிருந்த சுமார் 60 அப்யாசிகளுக்கு மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். அவர் அதன் பின் களைப்புற்று காணப்பட்டார். சில மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் பொருட்டு வீட்டினுள் சென்றார். மாலையில் பிரிபெக்ட் கூட்டத்தில் பங்கேற்கும் சுமார் 60 அப்யாசிகள் மாஸ்டரை சந்திக்க "காயத்ரி" வந்தனர். மாஸ்டர் அவர்களுடன் கூடத்தில் வந்தமர்ந்தார். அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. முதலில் அனைவரும் அமைதி காத்தனர். பின் ஒரு சகோதரி வயலினில் பண்ணிசைத்தார். அச்சகோதரி வயலினின் அதிர்வுகளை பற்றி பேசிய போது, மாஸ்டர், ஒவ்வொன்றும் அதிர்வலை தான் எனக்கூறினார். அச்சகோதரி ஒரு பாட்டு வயலினில் இசைத்த பின் மாஸ்டர், இசையை தொடருமாறு அவரை கேட்டுக்கொண்டார். அதன் பின் சில அப்யாசிகள் மாஸ்டருக்கு சில கடிதங்களும், பரிசுகளும் அளித்தனர். மாஸ்டர் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தபோது, தமது ஐரோப்பிய பயணங்கள், மொழிகள், மற்றும் எவ்வாறு சில



continued..



மொழிகள், குறிப்பாக ஸ்கேன்டிநேவிய மொழிகள் கற்பதற்கு மிகக் கடினமாக இருக்கின்றன என்பவை பற்றி நினைவு கூர்ந்தார்.

அந்த வாரம் முழுக்க இதே வழக்கம் தொடர்ந்தது: மாஸ்டரை சந்திக்க அப்யாசிகள் காலை நேரங்களில் வருவார்கள். மாலை நேரங்களில் மாஸ்டர் 50, 60 பேர் வரை கொண்ட குழுக்களாக வந்த ஐரோப்பிய பிரிசெப்டர்களை சந்தித்தார்.

**ஞாயிற்றுக்கிழமை, பிப்ரவரி 23**

மாஸ்டரின் உடல்நிலை அவ்வளவு நன்றாக இல்லை என்பதனால், அப்யாசிகள் 'காயத்ரி'க்கு செல்ல வேண்டாம் என அறிவிக்கப்பட்டது; எனினும், நிறைய பேர் அங்கு சென்றனர். மாஸ்டர் சுமார் 1 மணி நேரம் 10 நிமிடங்களுக்கு மிக நீண்டதொரு சத்சங்கத்தை நடத்தினார். அதன் பிறகு அவர் மிகவும் களைப்புற்ற போதிலும், வீட்டினுள் செல்லும் முன் சிலரை சந்தித்தார்.

**பிப்ரவரி 24-28**

மாஸ்டரின் உடல்நலம் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருந்தது. வியாழக்கிழமை இரவு, அவருடைய பேரன் பார்கவ் டெல்லியிலிருந்து வந்தார். அடுத்த 3 நாட்களுக்கு மாஸ்டர் மகிழ்ச்சிகரமாக இருந்தார்.

## மார்ச் 2014

**'காயத்ரி'யில் மாஸ்டர்:** மார்ச் 1-9

மார்ச் மாத முதல் வார இறுதியில் பார்கவ் 'காயத்ரி'யில் தங்கியிருந்தது, மாஸ்டருக்கு ஒரு வரவேற்கத்தக்க மாற்றமாக இருந்தது. முழு குடும்பத்திற்கும் அவருடன் சிறிது பொழுதை கழிக்க முடிந்தது. பார்கவ் 2ம் தேதி மாலை டெல்லிக்கு திரும்பிச் சென்றார்.

பார்கவ் சென்ற பின், மாஸ்டர் மேலும் ஒரு வாரம் 'காயத்ரி'யில் தங்கினார். அவர், ஓரளவு இளைப்பாறியவராக, நலமாக இருந்த போதெல்லாம் சத்சங்கங்கள் நடத்திக் கொண்டிருந்தார். அவரை சந்திக்க வந்தோரின் எண்ணிக்கை மிக அதிகமாக இல்லை. இது அவருக்கு புத்துணர்ச்சி அளிப்பதாக இருந்தது. அந்த வார இறுதியில், அவர் மணப்பாக்கத்திற்கு திரும்பிச் செல்ல தயாராக இருந்தார்.

**மணப்பாக்கத்திற்கு திரும்பி வந்த பிறகு:** திங்கட்கிழமை, 10மார்ச், 2014

ஒரு மாதம் 'காயத்ரி'யில் தங்கியிருந்த பிறகு, மாஸ்டர் மணப்பாக்கத்திற்கு திரும்பி வந்தார். அவருடைய உடல்நலம் மெதுவாகவும் சீராகவும் தேர்ச்சியடைந்திருந்தது. மேலும், அவரால் ஓரளவிற்கு சௌகரியமாக அங்குமிங்கும் போய் வர முடிந்தது. மாஸ்டர் ஆசிரமத்திற்கு வந்தபோது, கோல்ஃப் வண்டியில் வலம் வந்து மக்களை சந்தித்தார். மற்றும், பல்வேறு கட்டுமான பணிகளை ஆய்வும் செய்தார். அவர் சிட்டிங்குகள் கொடுப்பதிலும், அப்யாசிகளை சந்திப்பதிலும் ஓரளவு முனைப்பாக இருந்ததோடு நிர்வாக அலுவல்களிலும் ஈடுபட்டிருந்தார். அவர் எப்போதெல்லாம் தமது காட்டேஜிற்கு வெளியே அமர்ந்திருந்தாரோ, அப்போதெல்லாம் அவரைச் சுற்றி ஒரு அப்யாசிகள் கூட்டம் அமர்ந்திருக்கும்.

**மாஸ்டரின் சத்சங்கம்:** ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 16, 2014

காலை 6 மணிக்கெல்லாம் மாஸ்டர் தயாராகிவிட்டு, "நான் இன்று நலமாக உணர்கிறேன்" என்றார். ஓர் அப்யாசி, அன்று ஹோலி (வண்ணங்களின் திருவிழா) என்று குறிப்பிட்டார். மாஸ்டரின் முகம் பிரகாசமடைந்தது. "நான் சென்று சத்சங்கம் நடத்துகிறேன்" என்று கூறினார். ஒரு மணி நேரத்திற்கும் மேற்பட்ட சத்சங்கத்தை நடத்திவிட்டு, காட்டேஜிற்கு திரும்பி வந்தார்.

**கீதை பிரசங்கம்**

கீதையின் இறுதி (18ம்) அத்தியாயத்தின் மீது சகோதரர் சமஸ்கிருத கண்ணன் நடத்தும் பிரசங்கம் இன்றுடன் முடிவடைவதாக இருந்தது. அவர் ஓர் ஒன்றரை மணிநேர நிகழ்ச்சியில், இந்த அத்தியாயத்திலுள்ள பல்வேறு ஸ்லோகங்களைப் பற்றி விரிவாக உரையாற்றினார். பகவான் கிருஷ்ணரின் செய்தியான "அனைத்தையும் விட்டுவிட்டு, என்னிடம் சரணடைந்து விடு" என்பதே இவ்வுரையின் சாரமாக இருந்தது. மாஸ்டர் இந்நிகழ்ச்சியில் மிகவும் ஆழ்ந்திருந்தார். அந்த அத்தியாயத்தை முடிக்க இயலாமல் போனதால், இந்நிகழ்ச்சி அடுத்த வாரத்திற்கும் நீட்டிக்கப்பட்டது.





**புது மனை புகுதல்:** புதன் கிழமை, 19 மார்ச் 2014

மாஸ்டர், ஒரு புதுமனை புகு விழாவிற்காக, ஆசிரமத்திற்கு அருகில் உள்ள, துவாரகா அபார்ட்மென்டிற்கு வந்தார். அவர் நேராக மாடிக்குச் சென்று, அந்த வீட்டிற்கு வரப்போகும் குடும்பத்தினரை அழைத்து, பிரசாதம் வழங்கிய பின், சத்சங்கம் நடத்தினார். சுமார் 400 அப்யாசிகள் சத்சங்கத்திற்காக அங்கு கூடினர்! தனது சக்கர நாற்காலியில் அமர்ந்து வீட்டைச் சுற்றிப் பார்த்த மாஸ்டர், சிறிது நேரம் அங்கு தங்கி விட்டு, அதற்கு கீழ் தளத்தில் உள்ள, சகோ. கம்லேஷின் இல்லத்திற்குச் சென்றார்.

**சகோதரர் கம்லேஷின் இல்லம்:** 19-25 மார்ச் 2014

மாஸ்டர் அங்கு சில நாட்கள் தங்க முடிவு செய்தார். எப்பொழுதும் போலவே, காலையிலும், மாலையிலும் அப்யாசிகள் வந்தனர். மாஸ்டர், தனது காலை உணவுக்குப் பின், சத்சங்கங்கள் நடத்துவார். மாலை வேளைகளில், வெளியே கூடத்திற்கு வந்து, தனது பிஸியோதிரப்பிக்கான நேரம் வரையிலும், அங்கு கூடியிருக்கும் அப்யாசிகளைச் சந்திப்பார். இவ்வழக்கமானது, ஞாயிறு வரை தொடர்ந்தது.

ஞாயிறு காலை, சகோ. கம்லேஷ் சத்சங்கம் நடத்துவதற்காக ஆசிரமம் சென்ற பிறகு, மாஸ்டர் கீழே வந்து, அங்கிருந்தவர்களுக்கு சத்சங்கம் நடத்தினார். நீண்ட சிட்டிங்கிற்குப் பின், மாஸ்டர் மிகுந்த களைப்புடன் காணப்பட்டார். அவருக்கு சுவாசிப்பதிலும் சிறிது சிரமம் இருந்தது.

**கீதை வகுப்புகள்:** ஞாயிறு, 23 மார்ச் 2014

மாஸ்டர், சகோ. கம்லேஷின் இல்லத்தில் இருந்தபடியால், ஆசிரமத்தின் தியானக் கூடத்தில் நடைபெற்ற கீதை வகுப்பினை அவர் பார்க்கும் வண்ணம், ஒரு வீடியோ தொடர்பு ஏற்பாடு செய்யப்பட்டது. திட்டமிட்டபடி, இதுதான் கடைசி பகுதியாகும். உடல் நலம் சரியில்லாத போதும், மாஸ்டர் அதில் முழுமையாக ஆழ்ந்து இருந்தார். கூடுதலாக, கீதையின் எல்லா அத்தியாயங்களையும் விவரித்து, ஒரு தொகுப்புரைப் பகுதியும், அதன் பின் ஒரு வினா விடைப் பகுதியும் இருக்கும் என, இறுதியில் அறிவிக்கப்பட்டது.

**மாஸ்டரின் உடல் நலக் குறைவு:** 23-31 மார்ச் 2014

மாஸ்டரின் உடல் நலம் இன்னும் சரியாகாதபடியால், சில பரிசோதனைகள் செய்யப்பட்டு, அதற்கான சிகிச்சை தொடங்கப்பட்டது. மாஸ்டர் காட்டேஜுக்கு வர விரும்பினார். ஆனால் மிகவும் நலிவுற்று இருந்ததால் அவரால் முடியவில்லை. உடல் நலம் பெற சில நாட்கள் ஆனபடியால், மார்ச் 25 அன்று அவர் காட்டேஜுக்குத் திரும்பினார்.

## ஏப்ரல் 2014

ஏப்ரல் முதல் இரண்டு வாரங்களுக்கு, மாஸ்டர் தொடர்ந்து உடல் நலமின்றியே இருந்தார். அவரைக் கவனிக்க, மருத்துவர் குழு ஒன்று காட்டேஜில் இருந்தது. ஒருவரும் அவரைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. நோயைக் கண்டறிந்து, அதற்கான சிகிச்சை தொடங்கிய பின்னர், மாஸ்டர் உடல் நிலையில் மெதுவான, ஆனால் சீரான முன்னேற்றம் காணப்பட்டது. மருந்துகளால் சிறிது மயக்கமுற்ற நிலயில் அவர் இருந்தபடியால், நிறைய ஓய்வு எடுத்துக் கொண்டார். உடல் நிலை சிறிதளவு முன்னேறியவுடன், மாஸ்டர் வெளியே வந்து, காட்டேஜின் முன்புறமோ, அல்லது பாபூஜி மண்டபத்தின் முன்போ சிறிது நேரம் அமர ஆரம்பித்தார்.

பரோடாவிலிருந்து மூன்று சகோதரிகள் அவர்களது குடுப்பத்துடன் மாஸ்டரைச் சந்திக்க வந்திருந்தனர். மாஸ்டர், அவர்களைச் சந்தித்ததில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, அவர்களுடன் தனது நேரத்தைச் செலவிட்டார்.

ஒரு முறைசாரா உரையாடலின் போது மாஸ்டர் கூறிய சில குறிப்புக்கள்:

"மென்மையிலேயே உண்மையான பலம் உள்ளது. பலமில்லாதவர்களே கடினமாக இருக்கிறார்கள்."

"நடத்தையிலும், குணத்திலும் ஏற்படும் முன்னேற்றம் ஒன்று தான் வெளியில் காணப்படும் மாற்றம் ஆகும்".

"பணி குறையும்போது பொறுப்பு அதிகரிக்கிறது".

**தமிழ் புத்தாண்டு: ஏப்ரல் 14, 2014**

மாஸ்டர் மிகச் சீக்கிரமே எழுந்து, சில அப்யாசிகளுக்கு வாழ்த்து கூறினார். தியானக் கூடத்தில் அவர் சத்சங்கம் நடத்துவதாக இருந்தது. ஆனால் திடீரென்று அவர் மிகவும் களைப்புற்றதால், அதை ரத்து செய்யத் தீர்மானித்தார். அன்று அவரால் நிறைய அப்யாசிகளைச் சந்திக்க இயலவில்லை.

**விஷு, கேரளப் புத்தாண்டு: ஏப்ரல் 15, 2014**

மாஸ்டர் முற்றத்திற்கு வந்து, விஷுவைக் கொண்டாட, கேரளாவிலிருந்து வந்து அங்கு கூடியிருந்த சுமார் 80அப்யாசிகளையும், சென்னையைச் சேர்ந்த சில





மலையாளிகளையும் சந்தித்தார். விஷு நன்னாளில், முதன்முதல் பார்க்கப்படும் விஷுக்கனியை (பழங்கள், காய்கறிகள், மலர்கள், ஒரு உலோகக் கண்ணாடி மற்றும் நாணயங்கள்) அலங்கரிக்க மாஸ்டர் அனுமதியளித்தார். சகோ. கிருஷ்ணா மலையாளத்தில் ஆற்றிய சிறிய உரைக்குப் பின்னர், மாஸ்டர் ஒரு சிட்டிங் அளித்தார். விஷுக்கனியில் இருந்த கண்ணாடியை மாஸ்டர் பார்த்தபொழுது, நாம் கண்ணாடி பார்க்கும்பொழுது, நமக்குள்ளே இருக்கும் மாஸ்டரைக் காண வேண்டும் என்று கூறினார். பின், அங்கு கூடியிருந்தவர்களுக்கு மாஸ்டர் விஷுக்கைனீட்டம் (பாரம்பரியமாக, குடும்பத்தில் உள்ள மூத்தவர்கள் தம் குடும்பத்தினருக்கு வழங்குவது) வழங்கினார்.

**ஞாயிறு 20 ஏப்ரல், 2014:** மாஸ்டர் தியானக் கூடத்தில் சத்சங்கம் வழங்கினார். அவர், காலை 7.10 மணிக்கே தியானக் கூடத்திற்கு வந்திருந்து, சத்சங்கம் ஆரம்பிக்க, பத்து நிமிடங்களுக்கும் மேலாகப் பொறுமையுடன் காத்திருந்தார். சத்சங்கத்திற்குப் பின், மாஸ்டர் 3 திருமணங்களை நடத்தி வைத்தார். அறிவிப்புகளின்போது, "மாஸ்டர் தியானகூடத்திலிருந்து கிளம்பும் வரை, தயவுசெய்து தங்களுடைய இருக்கையிலேயே அமர்ந்திருங்கள்" என்று அறிவிக்கத் தவறிவிட்டதால், மாஸ்டர் சகோ. பிரகாஷை அழைத்து அதனை அறிவிக்கக் கூறினார். காட்டேஜிற்கு திரும்பி சென்றபிறகு, கீதை நிகழ்வினை சிறிது நேரம் கேட்டுவிட்டு அவர் ஓய்வெடுக்கச் சென்றார்.

**வளைகுடா கருத்தரங்கு** : மார்ச் 25 - 30, 2014

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வந்திருந்த 400க்கும் மேற்பட்ட அப்யாசிகள் மற்றும் 100 குழந்தைகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். 25 ந்தேதி சகோ. கம்லேஷ் 9 மணிக்கு சத்சங்கம் வழங்கி, சாதனாவின் முக்கியத்துவம் குறித்த உரையுடன் கருத்தரங்கைத் துவக்கி வைத்தார். தினமும் காலையில் ஒரு உரையும், மாலையில் பல்வேறு தலைப்புகளில் கருத்துரைகளும் இருந்தன. 29 ந்தேதி, சகோ. கம்லேஷ், நிகழ்ச்சியின் முடிவுரையாக, முறையான பயிற்சியின் தேவையையும், அதிக விழிப்புணர்வுடன் கூடிய மனித இனம் தோன்றி, அதனால் நல்லதொரு மாற்றம் இவ்வுலகில் ஏற்படுவதற்கான வழியான, கூட்டு அதிர்வலைகள் எனப்பொருள்படும் Egrigore என்ற வார்த்தையின் விளக்கத்தையும் கூறினார். 30 ம் தேதி, ஜுரமும், உடல் களைப்பும் இருந்த போதிலும், மருத்துவர்களின் அறிவுரைக்கு எதிராக, சத்சங்கத்திற்கு பிறகு மாஸ்டர் அனைத்து அப்யாசிகளையும் சந்தித்தார்.



**ஐரோப்பிய பிரிபெக்ட்கள் கருத்தரங்கு, மணப்பாக்கம்,** பிப்ரவரி 15 - 20, 2014

ஐரோப்பாவின் அனைத்து நாடுகளிலிருந்தும் வந்திருந்த 310 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கம், பங்கேற்பாளர்களை தங்களுக்குள்ளே ஆழ்ந்து எதிரொலிக்கும் நிலைக்கு எடுத்துச் சென்றது.

மாஸ்டர் முன்னிலும் தூய்மையாயிருத்தல் குறித்து பேசினார்.அனைத்து சிருஷ்டி மற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எல்லா மாஸ்டர்களும், அதற்குத் தேவையான துல்லியமான வேறுபாட்டை அடைய, அனுபவமுள்ளவர்களாகவும், தங்கள் பணியை நேசிப்பவர்களாகவும் இருக்க வேண்டியதன் தேவையைக் கூறினார். ஒரு பணி, அன்பு மற்றும் அர்ப்பணிப்புடன் செய்யப்படுவதற்கும், அலட்சிய மனப்பாங்குடன் செய்யப்படுவதற்கும் உள்ள முரண்பாட்டை எடுத்துக் காட்டினார்.

சகோ. கம்லேஷ் வழங்கிய மற்ற உரைகள், தன்னைவிட மற்ற அனைவரையும் நேசித்த லாலாஜியின் மனப்பான்மைகள் மற்றும் பாபூஜி எப்படி தூய்மையான உணர்வுகளையும், கூருணர்வுத்திறனையும் பெற்றிருந்தார் என்பவற்றை நினைவூட்டுவதாக இருந்தன. பிரிபெக்ட்கள் தங்கள் மதங்களின் பின்னணிகள் எவ்வாறு தங்களை இன்னமும் பாதித்து வருகிறது என்பதைப் பற்றி விவாதித்தனர்.

ஒரு பழைய ஓவியத்தை, அதன் உண்மையான நிலைக்கு திரும்பவும் கொண்டுவரத் தேவையான, மென்நயம், திறமை மற்றும் கவனிப்புடன் மாஸ்டர் அவர்களை உற்சாகமூட்டியதாக அனைவரும் உணர்ந்தனர். தன்னை இழந்துவிட்ட, வழிதவறிய மனிதனை அவர்களுடைய உண்மையான தெய்வீக நிலைக்கு மீண்டும் கொண்டு செல்லும் போற்றத்தக்க வாய்ப்புகளை சகஜமார்க்கத்தில் பெற்றிருக்கிறோம்.

"ஒரு மனிதன், தன்னுடைய பார்வையை, தன் உள்ளார்ந்த சுயத்தை நோக்கித் திருப்புகின்றபோதுதான், அவன் உண்மையான் மனிதனாக முடியும். சத்தியத்தைத் தேடும் உண்மையான் தாகம் அதில் தான் அடங்கியிள்ளது. அதை உறுதியாகப் பற்றிக் கொள்ளும் ஒருவர், எங்கிருந்து அனைத்தும் தானாகவே தோன்றியதோ, அதனுள் அடியெடுத்து வைக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் ஆதி மூலத்துடன் தன்னைப் பிணைத்துக் கொள்கிறார். அதன் பிறகு நிகழ வேண்டியது, அது விரிவடைந்து, வியாபிப்பது ஒன்றேயாகும். அதற்கு, நியமிக்கப்பட்டுள்ள பயிற்சி முறையே போதுமானதாகும்."

*பாபூஜி மகராஜ்*

*ராம் சந்த்ராவின் முழுமையான படைப்புக்கள் - பாகம் 2 பக்கம் 59*

## செய்தியைப் பரப்புதல்

### அகமதாபாத், குஜராத்



"ஆரோக்கியமான வாழ்வு பெற மகிழ்ச்சியாக வாழுங்கள்" என்ற நிகழ்வு மார்ச் 7 மாலை 5.30 மணிக்கு, ஒரு அப்யாசியினால் நடத்தப்படும் "பாரதீய யோக் ஸன்ஸ்தான்" என்ற அமைப்பினால், யோகா வகுப்பில் பங்கு பெறுபவர்களுக்காக, ஜோக்கெர்ஸ் பார்க்கில் நடத்தப்பட்டது.
Dr வினோத் அகர்வால் மற்றும் சகோ.பத்ரேஷ், "தியானம் செய்வதன் முக்கியத்துவம்", "மனித வாழ்வில் குருவின் பங்கு" மற்றும் "சகஜ மார்க்கத்தின் முக்கிய அம்சங்கள்" ஆகியவை பற்றி உரையாற்றினர். பங்கேற்ற 90 பேர்களில், சுமார் 40 பேர் மிஷனில் ஆர்வம் காட்டினர். வினாக்களுக்கு பிரிபெக்ட்கள் விளக்கமளித்தனர்.

### தடிபட்ரி, அனந்தபூர் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்

மார்ச் மாதம், கடப்பா மற்றும் தடிபட்ரியில், பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற அறிமுகக் கூட்டங்களுக்கு மிகப் பெரிய வரவேற்பு கிடைத்தது. 275 க்கும் அதிகமான மாணவர்கள் ஆர்வம் காட்டினார்கள். அதில் 170 பேர் மிஷனில் சேர்ந்தனர். இதில் 120 பேர் பொறியியல் கல்லூரியைச் சேர்ந்தவர்கள். ஆந்திரப் பிரதேசத்தின் பல பகுதிகளின் 20 ப்ரிபெக்டுகள் அறிமுக தியானம் வழங்கினர். அனேகம் பேர்களுக்கு ஒரு ஏற்புத் தன்மை இருந்ததையும், மாஸ்டரின் பணி மட்டவிழ்த்துக்



கொண்டு செயல்படுவதையும் உணர்ந்தனர். தடிபட்ரியிலுள்ள ஒரு கல்லூரியின் நிர்வாகம், அவர்களது வளாகத்தில் அறிமுக தியானங்களுக்கும், புதன்கிழமை சத்சங்கத்திற்கும் ஒரு அறையை ஒதுக்கித் தந்தது. 18 வயதிற்கும் குறைவாக இருந்த பலர், வயதின் காரணமாக தாங்கள் சேர முடியாததை உணர்ந்து ஏமாற்றமடைந்தனர்.

### கடப்பா

கடப்பாவில் உள்ள, ஒரு பல் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் முதுநிலைக் கல்லூரி, ஒரு உள்ளூர் வங்கி போன்றவற்றில்,நிகழ்த்தப்பட்ட 5 வரவேற்புக் கூட்டங்கள், மிகச் சிறந்த வரவேற்பைப் பெற்றன. 50 மாணவர்கள், பயிற்சியைச் சீக்கிரமே தொடங்குவதாக உள்ளனர். கடப்பாவின் புலிவேண்ட்லாவில், ஆசிரம வளாகத்தில் நடந்த வரவேற்புக் கூட்டமும் நல்ல வரவேற்பைப் பெற்றது. வேம்பல்லி, புலிவேண்ட்லா, கடப்பா, தடிபட்ரி, ஹைதராபாத் ஆகிய இடங்களின் சில ப்ரிபெக்டுகளும், RTPT கத்ரியிலுள்ள சில அப்யாசிகளும் இந்த அறிமுகங்கள் நடைபெற உதவி புரிந்தனர்.

### கொருட்லா மற்றும் மேட்பல்லி மையங்கள், வடக்கு ஆந்திரா

ஆந்திரப் பிரதேசத்தின் வடக்கு மண்டலத்தில் பயணம் மேற்கொள்ளும் பொழுது, மண்டலப் பொறுப்பாளர், சகோ. மது கொத்தப்பல்லியும் அவரது குழுவினரும், ஜகித்யால் பகுதியின் ப்ரிபெக்ட்டும், ஜகித்யாலிலிருந்து 5கி.மீ. சுற்றளவில் உள்ள கொருட்லா, மற்றும் மேட்பல்லி என்ற இரு இடங்களில் புதிய மையங்களை துவக்கினர். திரும்பி வரும் போது, அவர்கள் ஒரு தேனீர் விடுதியில் இறங்கி, மாஸ்டரின் ஆசிகளால், புதிய மையங்கள் நன்கு வளர பிரார்த்தனை செய்தனர். ஒரு மாதத்திற்குள், சகோ. மஞ்சலா கிருஷ்ணா இந்த மையங்களில் வரவேற்புக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தார். சகோ. கிருஷ்ணா ராவ், கொருட்லாவில் சகஜ மார்க்கத்தை அறிமுகப் படுத்தினார். 20 பேர் அறிமுக சிட்டிங்குகளை எடுத்துக் கொண்டனர். சகோ.சிங்கமராஜு மேட்பல்லியில் 10 புதிய









அப்யாசிகளுக்கு, சகஜ மார்க்க முறையைப் பற்றிப் பேசினார். மேலும் பல வரவேற்புக் கூட்டங்கள், ஜகித்யால், கரீம்நகர், கொத்தகுடம், சித்திபேட் ஆகிய இடங்களிலும் நடைபெற்றன. சுமார் 100 பேர் அறிமுக சிட்டிங்குகள் பெற்றனர். மௌனமான பிரார்த்தனை, உண்மையிலேயே பலனளிக்கிறது.

### பாலக்காடு, கேரளா

சகோ.ஷ்யாமளா மேனன் அவர்களால், பாலக்காடு ஆசிரமத்திலிருந்து சுமார் 25கி.மீ. தொலைவிலுள்ள வடவன்னூரில் உள்ள நாயர் சர்வீஸ் சொஸைட்டியில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடத்தப்பட்டது. சில அப்யாசிகள் உட்பட, 23 பேர் கலந்து கொண்டனர். சகோ.கிருஷ்ணன் K.T. (மையப்பொறுப்பாளர்) "மதமும் ஆன்மீகமும்" மற்றும் மனித வாழ்வில் ஆன்மீகத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்கினார். சகோ முரளிதரன் M. 'மனித வாழ்க்கையின் நோக்கம்' பற்றிப் பேசுகையில், இலட்சியத்தை அடைவதில் ஆன்மீகம் வகிக்கும் பங்கைப் பற்றி விளக்கினார். அதனைத் தொடர்ந்து கேள்வி பதில் நிகழ்ச்சி இருந்தது.

### கரக்பூர், மேற்கு வங்காளம்

மார்ச் 8 அன்று கரக்பூர் அருகில், ரூப்நாரயண்பூரிலுள்ள, டாட்டா ஹிட்டாச்சி நிறுவனத்தின் 75 பேர்களுக்கு, 2 மணி நேர தியான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி சகோ. ஸ்ரீலலிதா, சகோ.சந்தி ரகாந்தா அரோரா, சகோதரர்கள் C.S.R.மூர்த்தி, B.B. பேரா மற்றும் சில தொண்டர்களால் நடத்தப்பட்டது. சமநிலைப்படுத்தப்பட்ட வாழ்க்கையின் தேவை மற்றும் முக்கியத்துவம், அதை அடைய ஆன்மீகத்தின் உதவி, மற்றும் பயிற்சிமுறை பற்றிக் கூறப்பட்டது. கரக்பூர் மையத்தின் ஆன்மீக சூழலை உணர, மையத்தை பார்வையிடுவதற்கான அழைப்புடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

### மைசூர், கர்நாடகம்

பிப்ரவரி மாதம், சகோ. A.P. துரை, மைசூரிலுள்ள கர்நாடக காவல் பயிற்சி நிலையத்தை பார்வையிட்டார். அப்போது, பிப்ரவரி 16, 17 ஆகிய தேதிகளில் இரண்டு வரவேற்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 120 துணை காவல்துறை கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டதில் 33 பேர் ஏப்ரல் மாத இறுதியில் அறிமுகமாவார்கள். பயிற்சி பெறுபவர்கள் அடுத்த 8 மாதங்களும் பயிற்சி நிலையத்தில் தங்கவிருப்பதால், ஞாயிற்றுக்கிழமை சத்சங்கங்கள் மற்றும் தனித்தியானங்கள் வளாகத்திலேயே நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சிக்குப் பிறகு அவர்கள் கர்நாடகத்தின் பல பகுதிகளில் பணியமர்த்தப்படுவர். மைசூரிலிருந்து, 8 பிரிபெக்டுகள் இதில் பங்குபெற்றனர்.

### தமிழ்நாடு

சகோ. A.P.துரை, தமிழ்நாட்டிலுள்ள தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில், மார்ச் 16- 21 வரை பல்வேறு மையங்களைப் பார்வையிட்டு, அப்யாசிகளுடன் கலந்துரையாடி, வரவேற்புக்கூட்டங்களும் நடத்தினார்.

தஞ்சாவூரில், சுப்ரமணியம் மற்றும் முருகராசன் ஆகிய பிரிபெக்டுகளால், அரசு சர்க்கரை ஆலையின் தொழிலாளர் சங்கத்தில், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் 30 தொழிலாளர்களும், குடும்பத்தினரும் கலந்து கொண்டனர். 5 அறிமுக தியானங்கள் உடனடியாக கொடுக்கப்பட்டது. மேலும் தஞ்சாவூரிலுள்ள வெற்றி IAS பயிற்சி குழுமத்தின் 80 மாணவர்களுக்கு சகஜ மார்க்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

தூத்துக்குடியில் உள்ள வ.உ.சி. கல்லூரியில், 120 ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் கலந்து கொண்டனர். மேலும் ஸ்பிக் நகர் அருகிலுள்ள முத்தையாபுரத்தில் 20 பெண்கள் பங்கேற்றதில் 5 பேர் தியானம் ஆரம்பித்தனர். ஸ்ரீவைகுண்டத்திலுள்ள கே.ஜி.எஸ். கலைக்கல்லூரி, வடக்கன்குளம் அருள் பொறியியல் கல்லூரி மற்றும் ராஜா கல்வியியல் கல்லூரி மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

திருச்செந்தூர் மற்றும் உதங்குடிக்கு இடையிலுள்ள கசனவிலையில், சர்வைட் கான்வென்ட் மற்றும் பள்ளியில், சகோ.அக்குலினா(பிரிபெக்ட்) இயேசுவின் போதனைகளிலிருந்து சகஜ மார்க்கப் பயிற்சிக்கு மாற்றம் பற்றிய உரையை ஏற்பாடு செய்திருந்தார். அவர்களுள் 5 பெண் துறவியர் அறிமுக தியானங்கள் எடுத்துக்கொண்டனர்.

உதங்குடி துணை மையத்தில், சகோ.முத்துக்கிருஷ்ணாவின் இல்லத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தை தொடர்ந்து, 5 பேர் சேர்ந்தனர். வடக்கன்குளம் ஆசிரமக் கூட்டத்தில், 10 பேர் கலந்து கொண்டனர். மண்டலப்பொறுப்பாளர், சகோ. ராமனாதனும், உள்ளூர் பிரிபெக்ட்கள் சகோதரி மீராசங்கர், சகோதரர்கள் ராம்தாஸ், நாலாயிரம், கிருஷ்ணராஜன் ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.



## ராஜமுந்திரி, ஆந்திரப்பிரதேசம்



ஏப்ரல் 14ம் தேதி ஆந்திரப்பிரதேசத்தின் கடலோரப்பகுதிகளான ஸ்ரீகாகுளம், விஜயநகரம், விசாகப்பட்டினம், கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி மாவட்டங்களிலிருந்து, 22 ப்ரிபெக்டுகள், ராஜமுந்திரியிலுள்ள புதிய ஆசிரமத்தில் குழுமினர். மண்டலப் பொறுப்பாளர் சகோ.M.ஆதிநாராயணாவின் தலைமையில் நடந்த இந்நிகழ்ச்சி, 'எப்படி சிட்டிங்குகள் கொடுப்பது' என்ற மாஸ்டரின் உரையைக் கொண்ட வீடியோவுடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து சத்சங்கம் நடைபெற்றது. எல்லோரும் மாஸ்டருக்கு சேவை புரிவதில், மேம்பட்ட ப்ரிபெக்டுகளாகவும், செயல்புரிபவர்களாகவும் ஆகவேண்டும் என்று மண்டலப்பொறுப்பாளர் கூறினார். அவர், சிறுவர்கள் மற்றும் இளைஞர்களைக் கவர்ந்து, அவர்களை உற்சாகத்துடன் ஈடுபடச் செய்யும் சில செயல்களைப் பற்றிக் கூறினார். சில சகோதரர்கள், எப்படி ப்ரிபெக்டுகள் மேலும் சிறப்பாகப் பணியாற்றலாம் என்பதைப் பற்றியும், வெற்றிகரமாக நடத்தப்பட்ட சிறுவர் நிகழ்ச்சிகளைப் பற்றியும் பயனுள்ள குறிப்புகளை வழங்கினர். ப்ரிபெக்டுகளுக்கிடையே சிட்டிங்குகள் நடத்தப்பட்டு, அவர்களது கணிப்பைப் பற்றிய குறிப்புகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. 'ஈஸோடெரிக் ஸிம்பலை' பற்றிய சில 'விஸ்பர்ஸ்' அருட்செய்தி தொகுப்பு, படித்து அவற்றைப் பற்றி ஆழ்ந்த சிந்தனை செய்யும் பொருட்டு எல்லோருக்கும் வழங்கப்பட்டது. பயனுள்ளதாக இருந்த இச்சந்திப்பு, சத்சங்கத்துடன் முடிவுற்றது.

### ஜஸ்வந்த்கர், நாகௌர் மாவட்டம், ராஜஸ்தான்



ஏப்ரல் 6ம் தேதி, ஜஸ்வந்த்கர், லட்நுன், தித்வாநா மற்றும் சுஜந்கர் மையங்கள் மற்றும் அருகிலுள்ள கிராமங்களிலிருந்து சுமார் 90 அப்யாசிகள், அஸவா விருந்தினர் இல்லத்தில் குழுமினர். இந்நிகழ்ச்சி சகோ.விகாஸ் (மண்டலப் பொறுப்பாளர்) மற்றும் அனில் (ஜோத்பூர்) தலைமையில் நடைபெற்றது. சத்சங்கத்தைத் தொடர்ந்து மாஸ்டரின் வீடியோவும் பின்னர் காலைச் சிற்றுண்டியும் இருந்தன. ஒரு பஜனுக்குப் பிறகு 'சத்யோதயம்' ஆடியோவிலிருந்து ஒரு அத்தியாயம் ஒலிபரப்பப்பட்டது. பின்னர் அப்யாசிகள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்ட ஆடியோவிலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டனர். அடுத்த கேள்வித்தாள் 'சகஜ மார்க்கத்தின் அடிப்படைகள்' என்பதிலிருந்து இருந்தது. இச்சுற்றின் போது பல அப்யாசிகள் தங்களது தனிப்பட்ட அனுபவங்களைப் பற்றிய சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவாக்கிக் கொண்டனர்.

### அகமதாபாத், குஜராத்

விவசாயத்தைப் பின்னணியாய்க் கொண்ட சில சகோதர சகோதரியர்கள், அகமதாபாத் அதலஜ் ஆசிரமத்திற்குப் பின்புறம் உள்ள காய்கறித் தோட்டத்தில் தொண்டூழியராகப் பணிபுரியும் பொருட்டு ஒரு குழுவாகச் சேர்ந்தனர். இது அப்யாசிகளுக்கு நியாயமான விலையில் பசுமையான, கரிம வகையான, பூச்சிகொல்லி மருந்து கலக்காத கறிகாய்களை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இக்காய்கறிகள் ஆசிரமத்து சமையலறையிலும் பயன்படுத்தப்படுகின்றன. தொண்டூழியர்களின் தலைமையில் சிறுவர்கள் இம்முறையில் காய்கறிகளை வளர்க்கப் பயிற்சியளிக்கப்படுகிறார்கள். தொண்டூழியர்களின் கடுமையான உழைப்பின் காரணமாய் ஆசிரமத்தில் இப்போது நல்ல காய்கறித் தோட்டம் உள்ளது.

### வாரங்காவ், மகராஷ்ட்ரா

ஏப்ரல் 6ம் தேதி, வாரங்காவ், புஸாவல், கிர்டீ, தீப்நகர், ஜல்காவ், தூலே ஆகிய இடங்களிலிருந்து 55 அப்யாசிகள், ஒரு அரை நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். 'பத்து நியமங்களும் குண உருவாக்கமும்' என்ற தலைப்பில் கலந்துரையாடலும், அதைத் தொடர்ந்து 'A rare opportunity' என்ற வீடியோவும் ஒளிபரப்பப்பட்டது.

ஒரு வரவேற்புக்கூட்டமும் மற்றும் ஒரு சிறுவர்கள் நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து, சகஜ மார்க்க சாதனை மற்றும் முறையான பயிற்சியினால் எண்ணங்களை நேரான திசையில் எளிமையாய் ஆனால் வெற்றிகரமாய்த் திருப்புவதில் அதன் பங்கு பற்றிய ஒரு முறைசாரா உரை நடைபெற்றது.





## குஜராத், சூரத்தில், VBSE நிகழ்ச்சி



ஏப்ரல் 12ம் தேதி, சூரத் மையத்தில், நன்னெறி அடிப்படையிலான கல்வியைத் தொடங்குவதற்காக 'நன்னெறி அடிப்படையிலான கல்வியின் தேவை' பற்றிய, பெற்றோர்களுக்கான நிகழ்ச்சி, உம்ரா பிப்லாடில் உள்ள ரேடியன்ட் ஆங்கிலப்பள்ளியில் நடைபெற்றது. அதில், 120 பெற்றோர்கள், பள்ளி முதல்வர், நிர்வாகி மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். ஜூன் 2014 முதல் மார்ச் 2015 வரையிலான ஆண்டில், 9ம் வகுப்பு மாணவர்களுக்கு, நமது ஸ்ப்ரிச்சுவல் ஹயரார்க்கி வெளியீடு நிறுவனம் புதிதாக வெளியிட்டுள்ள நன்னெறிக் கல்வியின் புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இந்தத் திட்டத்திற்கு, பெற்றோர்களிடம் பெரும் வரவேற்பு காணப்பட்டது. பெற்றோர்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு முக்கிய பங்காற்றுவதால், அவர்களில் சிலர், பெற்றோர்களுக்கும், இந்நிகழ்ச்சிகளை நடத்துமாறு கேட்டுக் கொண்டனர்.

## யூ-கனெக்ட் (U-Connect), ஜெய்ப்பூர், இராஜஸ்தான்

யூ-கனெக்ட் திட்டத்தின் முதல் நிகழ்ச்சி, ஜெய்ப்பூர் ஆர்ச் பாயிண்ட் கன்சல்டன்ட் நிறுவனத்தில் நடைபெற்றது. 10 பேர், கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி, பங்கேற்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் அறிமுகங்களுடன் ஆரம்பித்தது. முதலில் பேசிய டாக்டர் ஆஸிஷ் ஜோகரி, வரப்போகும் 16 வகுப்புக்களின் விதி முறைகளை, அவர்களைக்கொண்டே வகுக்கச்செய்தார். பின்னர் அவர் கூறிய வாத்து கதை, அவர்களை, வாழ்க்கையில் சரியான செயல்களை, சரியான நேரத்தில் செய்ய வேண்டியதின் அவசியத்தைப்பற்றி சிந்திக்க வைத்தது. அதைத்தொடர்ந்து, கேட்கப்பட்ட கேள்விகள், ஆன்மீக வளர்ச்சியைத் தூண்டுவதாக இருந்தன. உதாரணங்கள் மற்றும் கேள்வி-பதில்கள் மூலம், ஆன்மிக வாழ்க்கை முறையின் அவசியத்தை சகோதரர்.ஆஸிஷ் வலியுறுத்தினார். எல்லோரையும் பங்கேற்கச் செய்வதாக இருந்த இந்நிகழ்ச்சியால் அனைவரும் மகிழ்வுற்றனர்.



## தொண்டர்களுக்கான நிகழ்ச்சி, மும்பை

சுமார் 40 தொண்டர்கள், மும்பை உதயகிரியிலிருக்கும் சகோதரி ஷுப்தா நாயக்கின் இல்லத்தில் 19 பிப்ரவரி அன்று கூடினர். சகோ. மோகன்தாஸ் ஹெக்டே, மேற்கொள்கள், உதாரணங்கள் மற்றும், சுய அனுபவங்களைக் கூறி, மிஷனில் தொண்டு புரிவதைப் பற்றி பேசினார். மாஸ்டர் கடந்து செல்ல வழிகளாக நாம் மாற வேண்டியதன் அவசியம் பற்றி பரிந்துரைத்து, தொண்டாற்றுவதன் மூலம் அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். ஒருங்கிணைப்பு மற்றும் குழுக்களை அமைப்பது, இதைத் தொடங்க ஒரு மேடையாக இருக்கும் என அவர்கள் முன் வைத்தார். குழுவிலுள்ள ஒவ்வொரும் மற்றவர்களை ஒரு மாத காலத்திற்குள் தொடர்பு கொண்டு தான் எப்படி நல்ல அப்யாசியாக மாற முடியும், தொண்டுபுரிதலுக்கு இன்னும் என்ன செய்ய வேண்டும் மற்றும் அதைத் தொடங்கியாயிற்றா? என வினவுமாறு கேட்டுக்கொண்டார்.

## ஸ்ரீ நகர்

ஜம்மு மையத்தைச் சேர்ந்த ஒரு குழு, ஸ்ரீ நகருக்கு மார்ச் 28 முதல் 31 தேதிகளில் சென்று, GITP தியானம் மற்றும் சுத்திகரிப்பு வகுப்புகளை, பதமி பாக் CRPF கேம்பில் நடத்தியது. ஊரடங்கு மற்றும் கடையடைத்தல்கள் அடிக்கடி நடைபெறும் ஸ்ரீநகரில், இதுவே முதல் முறையாக நடத்தப் பட்ட நிகழ்ச்சியாகும்.

சுமார் 35 அப்யாசிகள் கலந்து கொண்டனர். அவர்களில் பெரும்பாலானோர், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கும் CRPF-ஐச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். ஜம்மு மையத்தைச் சேர்ந்த, மண்டலம் 11-A மண்டலப்பொறுப்பாளர், சகோ. சுரேந்தர் சர்மா தலைமை தாங்கினார். சகோ.ஜுகல் கிஷோர் (ப்ரிபெக்ட்) மற்றும் சகோ.அஸ்வனி தாகூர் GITP வகுப்புகளை நடத்தினர்.





## இளைஞர் பகுதிகள்



### பில்வாரா, ராஜஸ்தான்

பிப்ரவரி கடைசி ஞாயிறன்று, தியானம் முடிந்தவுடன், 12 அப்யாசிகள் ஒன்று கூடினர். ஒரு சகோதரி, லாலாஜியின் பிறந்த நாளின் போது சகோ.கம்லேஷ், தினசரி வாழ்வை மேம்படுத்திக்கொள்வது பற்றி ஆற்றிய உரையிலிருந்து, சில மேற்கோள்களை எடுத்துக் கூறினார். அப்யாசிகள், சகஜ மார்க்கத்தில் சேர்ந்த பின், தங்களுக்கு ஏற்பட்ட மாற்றங்கள் குறித்துப் பேசினர். சாதனாவில் ஏற்படும் கஷ்டங்களைத் தெளிவாக்கிக் கொள்ள, "சகஜ மார்க்கத்தின் மூல தத்துவங்கள்" என்ற புத்தகத்தைப் படித்து, தனித் தியானத்தின் போது ப்ரிபெக்டிடம் அதைப் பற்றி கலந்தாலோசிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

மார்ச் 30 ஆம் தேதி இன்னோரு இளைஞர் கூட்டம் நடைபெற்றது. புதிய அப்யாசிகளுக்கு, பண்டாராவின் முக்கியத்துவம் பற்றிக் கூறப்பட்டது. பண்டாராவின் அனுபவங்களைப் பலர் பகிர்ந்து கொண்டனர். பாபூஜியின் பிறந்தநாளுக்கான முன்னேற்பாடுகள் தொடங்கப்பட்டு, பல்வேறு பணிகள் பற்றிய கருத்துகள் ஆலோசிக்கப்பட்டன. தன்னார்வ சேவைகளுக்கு அப்யாசிகள் பதிவு செய்து கொண்டனர்.

### வாரணாசி, உத்தர பிரதேசம்

வாரணாசி மையத்தில், 8 ப்ரிபெக்டுகள், 5 பயிற்சியாளர்கள், 10 சுயசேவகர்கள் மற்றும் 12 இளம் அப்யாசிகள் கலந்து கொண்ட 3 நாள் கூட்டத்தொடர், ஏப்ரல் 12-14 நடைபெற்றது. முதலில் அனைவருக்கும் தனித்தியானம் கொடுக்கப்பட்டது. அன்பும் கட்டுப்பாடும், கீழ்ப்படிதல், சேவை, மாஸ்டரை ஏற்றுக்கொள்ளுதல், பத்து நியமங்கள், சகஜ மார்க்கத்தில் இளைஞர்களின் பங்கு, ஆகியவை பற்றிய உரைகளும், "ஆன்மீகம் ஏன்?" மற்றும் LMOIS, CREST, SMSF, SHPT, புத்துணர்வு மையங்கள், அறக்கட்டளைகள் பற்றிய கருத்துக்கோவைகளும் நடைபெற்றன.

அனைவருக்கும் மிஷனின் புத்தகங்கள் தரப்பட்டு, குறிப்பிட்ட தலைப்புகளில் கருத்துக்களை சொல்வதற்கு கேட்டுக்கொள்ளப்பட்டனர். "வாழும் கலை", "பயிற்சி நம்மை நிறைவுள்ளவர்களாக ஆக்குகிறது", "அன்பு இல்லத்தில் ஆரம்பமாகிறது", மற்றும் "பொறுமையின் கனி இனிப்பானது" போன்ற தலைப்புகளில் சிறு நாடகங்களும் வழங்கப்பட்டன. பின், 2 மணி நேரம் சுயசேவை புரிந்தனர். மாஸ்டரின் உரை, பொன்னான மௌனம் மற்றும், தியானங்களும் இருந்தன. அனைவரும் இந்த நிகழ்வின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.




### மண்டலப் பொறுப்பாளரின் மொராதாபாத் வருகை, உத்தரப் பிரதேசம்

ஏப்ரல் 13அன்று, சகோ.அஷோக் கார்க் (மண்டலப் பொறுப்பாளர்), மொராதாபாத் ஆசிரமத்திற்கு வருகை புரிந்தார். சத்சங்கத்திற்குப் பின், பண்டாரவில் கலந்து கொள்ளுதல், சாதனா ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தினார். பின் அவர், ப்ரிபெக்டுகள் கூட்டத்திலும், ஆசிரம நிர்வாகக் குழு கூட்டத்திலும் பங்கேற்று, கேள்வி களுக்கு பதிலளித்து, ஆசிரமப் பராமரிப்புக்கான சில கருத்துக்களையும் வழங்கினார்.

### மண்டலப் பொறுப்பாளர், தென் தமிழ்நாடு- மானாமதுரைக்கு வருகை

மானாமதுரை, சிவகங்கை, காரைக்குடி, பரமக்குடி மற்றும் ராமனாதபுரம் மையங்களைச் சேர்ந்த சுமார் 130 அப்யாசிகளுடன் ஒரு முழு நாள் நிகழ்வு, பிப்ரவரி 23 ஆம் தேதி, மானாமதுரை மையத்தில் நடைபெற்றது. சத்சங்கம், காலை உணவுக்குப் பிறகு, அப்யாசிகள் ஏழு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, பயிற்சியின் அடிப்படைகளான தியானம், சுத்திகரிப்பு, பிரார்த்தனை, சேவை, மாஸ்டரின் பால் அன்பு, குண உருவாக்கம், ஆகிய பல விஷயங்கள் தரப்பட்டன. கருத்துப் பரிமாற்றத்திற்குப் பிறகு, ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு அப்யாசி தனது குழுவின் கருத்துக்களை எடுத்து கூறினார்.

சகோ. ராமனாதன், அப்யாசிகள் சகஜ மார்க்கக் கோட்பாடுகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, தங்களது வாழ்க்கையை எளிமையாகவும், இயல்பாகவும், மாஸ்டர் விரும்புவது போல் வாழ வேண்டும் என்றும் சொன்னார்.

குழந்தைகள், ஒரு நாடகத்தையும், திருப்பூரில் 2013ல் நடைபெற்ற பாபூஜியின் பிறந்த நாள் விழாவின் போது நடைபெற்ற சுவையான நிகழ்வுகளையும் நடத்திக் காண்பித்தனர்.

மதிய உணவிற்குப் பின் இருந்த கேள்வி பதில் பகுதி, அப்யாசிகளின் இதயத்தில் சகஜ மார்க்கப் புரிந்து கொள்ளுதலை ஆழமாக்கியது. மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி முடிவுற்றது.



### ரெய்ச்சூர், கர்நாடகா

ஏப்ரல் 5, 6ம் தேதிகளில், ரெய்ச்சூர் ஆசிரமத்தில், ரெய்ச்சூர், குல்பர்க்கா, ஷோராபூர், கோசி மற்றும் இன்னும் சில மையங்களைச் சேர்ந்த சுமார் 100 அப்யாசிகளுக்கு, பெங்களூரைச் சேர்ந்த, சகோ. வெங்கட் ராவ் குழுவினரால், "மிஷனின் இலக்கியங்களைப் படிப்பதன் முக்கியத்துவம்" பற்றிய, 2 , நாள் நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. இரண்டு நாட்களிலும், காலை 7.30 மணி சத்சங்கத்துடன் துவங்கிய நிகழ்ச்சி, உரைகள், வினா-விடைப் பகுதி, கலந்துரையாடல்கள் மற்றும் மாலை சத்சங்கத்துடன் முடிவடைந்தது. வடக்கு கர்நாடகா மண்டலப் பொறுப்பாளர், டாக்டர் கஜேந்திர சிங், நிகழ்ச்சியில் பங்கேற்று, அவ்வப்போது தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். அப்யாசிகள் அனைவரும், தாங்கள் மிகவும் பயனுற்றதாகக் கூறி மகிழ்ந்தனர். இதே போன்ற நிகழ்ச்சி ஒன்று, குல்பர்க்காவில், ஜூன் கடைசி வாரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



### கரக்பூர், மேற்கு வங்காளம்

புதிதாகச் சேர்ந்த 35 அப்யாசிகளுக்காக, கரக்பூர் மையத்தில், மார்ச் 9 அன்று, ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. உலகாயதப் பொருட்களைப் பெறுவதை விட, வாழ்க்கையின் குறிக்கோளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் தேவையை வலியுறுத்திய மாஸ்டரின் வீடியோ உரை ஒன்று காண்பிக்கப்பட்டது. பயிற்சி பற்றிய சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. தினசரிப் பயிற்சியைத் தாங்கள் எவ்வாறு செய்கிறார்கள் என்பதை விவரிக்கும்படி சில அப்யாசிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதன் மூலம், கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படி, அவர்கள் பயிற்சி செய்யவில்லை என்பது தெரியவந்தது. அவைகளுக்கு சரியான பயிற்சி முறை பற்றி விளக்கப்பட்டது. சகஜ மார்க்கப் பயிற்சி முறை என்ற புத்தகத்தில் இருந்து, பிரார்த்தனை, தியானம், சுத்திகரிப்பு போன்ற பகுதிகள், பெங்காலி மற்றும் ஆங்கில மொழியில் வாசிக்கப்பட்டு, அவை ஹிந்தியிலும் மொழி பெயர்க்கப்பட்டன. சகோதரி சந்தர்காந்தா, பிரார்த்தனை, தியானம், சுத்திகரிப்பு, சத்சங்கம் மற்றும் பண்டாரா பற்றிய கருத்துரை ஒன்றை ஹிந்தியில் வழங்கினார். தேநீர் மற்றும் சிற்றுண்டியுடன், நிகழ்ச்சி முடிவடைந்தது.

## புதிய நியமனங்கள்

**மையப் பொறுப்பாளர், கோவா**

**சகோ. தத்தா பிரசாத் விநாயக் போன்ஸ்லே**

## புதிய வெளியீடுகள்




அனந்ததை நோக்கி தமிழ்



வாட் இஸ் சகஜ் மார்க் - மராத்தி




வே கஹ்தே ஹை- பாகம் 5 - ஹிந்தி


மை மாஸ்டர் ஆடியோ புத்தகம் - தெலுங்கு



ரியாலிடி அட் டாண் ஆடியோ புத்தகம்- பெங்காலி


டுவேர்ட்ஸ் இன்~ஃபினிடி ஆடியோ புத்தகம்- ஹிந்தி



**சகஜ் மார்க் மென்டரிங்ஸ்**
தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, கன்னடம் மற்றும் மலையாளம்



ரியாலிடி அட் டாண் ஆடியோ புத்தகம்- மலையாளம்



தி பாய்ன்ட் ஆ~ஃப் அட்டென்ஷன் ஆங்கிலம்- DVD



இந்தியா இன் த வெஸ்ட் ஆங்கிலம்- DVD



இன் ட்யூன் வித் நேச்சர் ஆங்கிலம் - DVD

## கேரளா மண்டல ஆசிரமம், அலுவா

## ஒளி மையம்

"'என்னுடையது எதுவுமில்லை' என்பதுதான் இயற்கையின் முதல் மற்றும் கடைசி விதியாகும். ஆனால், தெய்வீக அருள் பாய்ந்து கடந்து செல்லக்கூடிய ஒரு வழியாக நான் மாறினால், நான் நிரந்தரமான ஒன்றாக ஆகிறேன். ஏனெனில், நிரந்தரத்தி ற்கு எப்போதும் அது பாய்ந்து செல்லக்கூடிய ஒரு நிரந்தர வழி தேவைப்படுகிறது."
பா. ராஜகோபாலாச்சாரி, செப்டம்பர்6, 1995, அலுவா



அலுவாவில், சகோ. M.P. மதுசூதன் இல்லத்தில் தான் முதலில் சத்சங்கம் நடைபெற்று வந்தது. அப்யாசிகளின் எண்ணிக்கை அதிகரித்தபடியால், அவரது இல்லத்தின் முதல் மாடியில் ஒரு தியானக் கூடம் கட்டப்பட்டு 1994, 20 மே அன்று, அப்போது மிஷனின் செயலாளராக இருந்த சகோ. சாரநாத்ஜி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

1995, செப்டம்பர் 6 அன்று, மாஸ்டர் முதல் முறையாக கேரளாவிற்கு வருகை புரிந்தார். அலுவாவில் உள்ள, மகாத்மா காந்தி முனிசிபல் டவுன் ஹாலில், மிகப் பெரிய விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் சுமார் 800 அப்யாசிகள் பங்கேற்றனர்.

1996, ஜனவரி 12 அன்று, அருகில் உள்ள கடுங்களூர் என்ற கிராமத்தில் நிலம் வாங்க, மாஸ்டர் அனுமதி அளித்தார். தாழ்நிலப் பகுதியில், சுமார் 2 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, அது செம்மண்ணால் நிரப்பப்பட்டது. பின்பு, எல்லைச் சுவர்களும், ஒரு வாசற் கதவும் கட்டப்பட்டு, அவ்விடத்திற்கு 'சகஜ கிராமம்' என்று பெயரிடப்பட்டது. மிஷனுக்காக, 70 சென்டுகள் ஒதுக்கப்பட்டு, மிக்கிய இடம், ஒவ்வொன்றும் 5 சென்ட் அளவுள்ள மனைகளாகப் பிரிக்கப்பட்டது. முதலில் ஆன செலவை 28 அப்யாசிகள் பகிர்ந்து கொண்டனர். தற்சமயம் அவ்வளாகத்தில் 10 குடும்பங்கள் வசித்து வருகி ன்றன.

2001, 25 பிப்ரவரி அன்று மாஸ்டர் இரண்டாம் முறையாக அம்மையத்திற்கு வருகை புரிந்தபோது, ஆசிரமத்தைத் துவக்கி வைத்தார். 5000 சதுர அடியில் ஒரு தியானக் கூடம், முதல் தளத்தின் மூன்று பக்கங்களிலும் மூன்று தங்கும் வி டுதிகள், மற்றும் இரண்டாம் தளத்தில் இரண்டு பெரிய நீர்த் தொட்டிகள் ஆகியவை அச்சமயத்தில் இருந்த வசதிகள்



ஆகும். மிஷனுக்காக, அப்யாசிகளிடமிருந்து சில மனைகளை வாங்கிக் கொள்ளும்படி மாஸ்டர் கருத்துத் தெரிவித்ததால், தற்போது மிஷனுக்காக, 1.14 ஏக்கர் நிலம் உள்ளது.

கன மழை மற்றும் ஈரப்பதத்தைத் தாங்கக் கூடிய வகையில், கேரளாவின் பாரம்பரியக் கட்டிட முறையில் அமைக்கப்பட்ட முன் முகப்பு, இரும்பு கட்டுருவாக்கம், அலுமினியம் மற்றும் கலப்பு உலோகத்தினால் ஆன வண்ணத் தகடுகளைக் கொண்ட கூரை என, மிகப் பெரிய மாற்றங்களுடன் 2011ம் ஆண்டு ஆசிரமம் புதுப்பி க்கப்பட்டது. 2012ம் ஆண்டின் முற்பகுதியில் இப்பணி முடிவுற்றது. புதுப்பிக்கப்பட்ட ஆசிரமத்தின் வீடியோ எடுக்கப்பட்டு, மணப்பாக்கத்தில் மாஸ்டரிடம் சமர்ப்பி க்கப்பட்டபோது, அவர், "அற்புதம்" எனக் கூறினார்.

மைய அளவிலான பண்டாராக்கள், மண்டல அளவிலான கூட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பிரிபெக்ட் கூட்டங்கள் ஆகியவை இங்கு நடத்தப்படுகின்றன. SHPT மற்றும் SRCM வெளியீடுகளுக்கான கணக்கீடு மையமாகவும், மண்டல அளவிலான விநியோக மையமாகவும் இந்த ஆசிரமம் செயல் படுகிறது. கேரளாவின் மையச் செயல்பாடுகள் அனைத்தும், அலுவாவில் தான் நிர்வகிக்கப்படுகின்றன.





To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org
© 2014 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.